நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். I மேட்டூர்.

## CC. No.849/2025

## P.W.5 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாலன் |
| தந்தை / கணவர் பெயர் | : | காளியப்பன் |
| கிராமம் | : | மேட்டூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW5** |
| வயது | : | 56 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம்,மே மாதம், 25–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.00 PM

1. நான் தற்போது மேட்டூர் குமரன் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் பேருந்து நிலையத்தில் தனியார் பேருந்து நேரகண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நான் பேருந்து நிலையத்தில் இருந்தபோது கூட்டமாக இருந்தது. எனக்கு அப்போது நான் பணிபுரியும்

பேருந்தை அனுப்ப வேண்டியிருந்ததால் நான் அங்கு சென்றுபார்க்கவில்லை.

2. மறுநாள் மதியம் 1 மணிக்கு உதவி ஆய்வாளர் ஒருவர் வந்து சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர்மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். அதற்கு சாட்சியாக இருக்க கேட்டதால் நான் அதற்கு சாட்சி கையொப்பம் செய்தேன். வேறு யாராவது கையெழுத்து செய்தார்களா என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். நான் கையெழுத்து போடும்போது விவரங்கள் நிரப்பபடாத வெற்றுதாளில்தான் கையெழுத்து செய்தேன்.

3. அதன் பின்னிட்டு அதில் நிரப்பபட்ட விவரங்கள் எனக்கு தெரியாது. **அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை அவசியம் இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 1.10 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1 மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். I மேட்டூர்.

## CC. No.849/2025

## P.W.6 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பிரசாந்த் |
| தந்தை / கணவர் பெயர் | : | குமார் |
| கிராமம் | : | – |
| வட்டம் | : | பாப்பிரெட்டிபட்டி |
| மாவட்டம் | : | தர்மபுரி |
| சாட்சி வரிசை எண் | : | **PW6** |
| வயது | : | 32 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம்,மே மாதம், 25–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.11 PM

1. நான் தற்போது ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.02.2025 ம் தேதி நான் மேட்டூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்து வந்த தகவலை பெற்று அங்கு சென்று

சிகிச்சையில் இருந்த ராஜகோபால் த.பெ. கருப்பண்ணசெட்டியார் என்பவரை பார்க்கும்போது மயக்க நிலையில் இருந்ததால் அவருடன் இருந்த அவருடைய மனைவி அ.சா.1 சாந்தி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

2. பின்னிட்டு காவல் நிலையம் வந்து அந்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேட்டுர் காவல் நிலைய குற்ற எண்.98/2025, ச.பி. 281, 125(a) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். ( **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையுடன் அசல் புகார் வாக்குமூலத்துடன் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

3. அதன்பிறகு சம்பவயிடத்திற்கு 21.15 மணிக்கு சென்று சம்பவயிட சாட்சிகள் பாலன் மற்றும் சதிஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். ( **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. மேலும் சம்பவயிட சாட்சிகளான சாந்தி, அங்கமுத்து, அஜீத்குமார்,ஜெகதீஷ்வரன், பாலன், சந்துரு, மகேஷ்வரன், கார்த்திகேயன், பிரபு, மற்றும் சதீஷ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். அதன்பின்னிட்டு மேற்படி சிகிச்சையில் இருந்த ராஜகோபால் மேல்சிகிச்சைக்காக கோவையில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிக்கும்போது சிகிச்சை பலனளிக்காமல் 25.02.2025 ம் தேதி காலை 05.25 மணிக்கு இறந்துவிட்ட தகவலை பெற்று இந்த வழக்கின் சட்டபிரிவை ச.பி.281, 125(a) BNS லிருந்து ச.பி.281, 106(1) BNS ஆக சட்டபிரிவு மாறுதல் செய்து சட்ட பிரிவு மாறுதல்அறிக்கை தயார்செய்தேன்.

5. **( மேற்படி கங்கா மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டது தொடர்பாக பெறப்பட்ட எழுத்துபூர்வமான தகவல் அ.சா.ஆ.6 மற்றும் மேற்படி கங்கா மருத்துவமனையில் இருந்து பெறப்பட்ட விபத்து பதிவேட்டு அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது மற்றும் இறப்பு குறித்து பெறப்பட்ட**

**எழுத்துபூர்வமான தகவல் (2எண்ணிக்கை) அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது மற்றும் சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

6. அதன்பின்னிட்டுமேற்படி கங்கா மருத்துமவனையில் வைத்து காலை 10.30 மணியிலிருந்து காலை 12.30 மணிவரை பிரேத விசாரணை சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். ( **பிரேத விசாரனை அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் பிரேத பரிசோதனை மேற்கொள்வதற்காக சிறப்பு உதவி ஆய்வாளர் காத்தவராயன் என்பவர் மூலமாக கங்கா மருத்துவமனையில் இருந்து கோவை அரசு மருத்துவமனைக்கு அவரது உடலை எடுத்துச்சென்று கோவை அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடிதத்தை கொடுத்தேன்.

7. வழக்கில் இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து மேல்விசாரணைக்காக இந்த வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். இதுசம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. விபத்தில் இறந்துபோன ராஜகோபால் என்பவருக்கு வலதுக்கால் பாதம் சிதைந்து இருந்தது. இடதுக்கால் பாதத்திலும் இரத்தகாயம் ஏற்பட்டு அடிப்பட்டிருந்தது. இறந்துபோன ராஜகோபால் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை நான் வாங்கவில்லை. காவல் ஆய்வாளர் அவர்கள் வாங்கினார். இந்த வழக்கின் சாட்சிகளான அஜீத்குமார், அங்கமுத்து, ஜெகதீஷ்வரன் ஆகிய மூன்று பேரும் பேருந்தை ஓட்டிவந்த நபரை பார்க்கவில்லை என்றும் விபத்து எப்படி நடந்தது என்றும் நாங்கள் பார்க்கவில்லை என்று சொல்லவில்லை.

2. விபத்து நடந்த இடத்தை சம்பவயித்தில் இருந்த அங்கமுத்து, சதீஷ்குமார் ஆகியோர் அடையாளம் காட்டினர். மகசர் சாட்சியான பாலன் என்பவரை

சம்பவயிடத்தில் வைத்து விசாரணை செய்தேன். மகசரை சம்பவம் நடந்த அன்றைய தினமே தயார் செய்தேன். பாலன் என்னுடைய விசாரணையில் சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்றும், பார்வை மகசர் அடுத்தநாள் தயாரித்தாக சொல்லவில்லை. இந்த வழக்கு கோப்பை 26.02.2025 ம் தேதி காவல் ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். அன்றையதினமே என்னை அவர்கள் விசாரித்தார்.

3. தவறுதலாக அளிக்கப்பட்ட புகாரின்பேரில் சரிவர விசாரிக்காமல் தவறுதலாக ஒரு முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக சம்பவயிடம் செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தேன் என்றால் சரியல்ல. சம்பவயிட சாட்சிகளான அஜீத்குமார், அங்கமுத்து, ஜெகதீஷ்வரன் ஆகிய சாட்சிகளை நான் விசாரிக்காமல் தற்போது நீதிமன்றத்தில் அவர்களை விசாரித்தாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. எதிரியின் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றும் விபத்தில் இறந்துபோன ராஜகோபால் என்பவரின் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 1.35 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1 மேட்டூர்.**